08.10.2020

**பி.வா.சா.1 பெருமாள் என்பவர் ஆஜராகி சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**3ம் பிரதிவாதி தரப்பில் கு.வி தொடர்ச்சி**

பிவாசாஆ6 பதில் அறிவிப்பில் 6வது பாராவில் 3ம் பிரதிவாதி சொத்தை அதிக விலைக்கு கேட்பதனால் 1ம் பிரதிவாதிக்கு சொத்தை கிரையம் செய்ய மறுத்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதனடிப்படையில் அவ்வாறு சொல்லியுள்ளேன் என்றால் 1ம் பிரதிவாதி தனது பிள்ளைகள் மறுப்பதாகவும் தன்னுடைய பங்கை எழுதிக்கொடுப்பதாகவும் சொன்னதால் 3ம் பிரதிவாதி சொத்தை அதிக விலைக்கு கேட்பதாக சொல்லியுள்ளேன். அதை யூகத்தில் அடிப்படையில் தான் சொன்னேன் என்றால் சரிதான். பிவாசாஆ6 பதில் அறிவிப்பின் நகலை நான் 3ம் பிரதிவாதிக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். என்னுடைய கட்சிப்படி பிவாசாஆ3 கிரைய ஒப்பந்த அடிப்படையில் தான் அ.வ.எண்.85/2008 வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிவாசாஆ3 கிரைய ஒப்பந்ததில் மொத்த தபசில் சொத்தும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ6 பதில் அறிவிப்பில் நான் 1ம் பிரதிவாதி வழக்கறிஞருக்கு 1ம் பிரதிவாதி ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் பிரிவினையில்லாத 1/3 பங்கிற்குரிய கிரைய தொகையாக நான் 1ம் பிரதிவாதிக்கு செலுத்தியுள்ளதாக சொல்லப்படும் ரூ.4 லட்சத்தில் ரூ.3,20,000/-த்தை எடுத்துக்கொண்டு சொத்தில் உள்ள வில்லங்கங்களை நீக்கி 04.11.2007ம் தேதிய கிரைய ஒப்பந்தப்படி கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிவாசாஆ3 கிரைய ஒப்பந்தத்திற்கு முரணாக பிவாசாஆ6 பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ6 பதில் அறிவிப்பில் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்படாத சொத்தை தனக்கு பாத்தியப்பட்டதாக கூறி கிரைய

ஒப்பந்தம் எழுதிக்கொடுத்ததால் நான் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்வேன் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இதுவரையில் 1ம் பிரதிவாதி மீது குற்றவியல் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் காவல்துறையில் புகார் கொடுத்துள்ளேன். தேதி ஞாபகமில்லை. புகார் நகலை தாக்கல் செய்யவில்லை. புகார் மனு ரசீது கொடுத்தார்கள். அதை தாக்கல் செய்யவில்லை. மேற்படி விபரத்தை வழக்கில் இதுவரையில் நான் சொல்லக்கிடையாது என்றால் சரிதான். காவல்துறையினர் நான் கொடுத்த புகார் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் சிவில் கேஸ் இருப்பதால் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். குற்றவியல் நீதிமன்றத்தில் தனிப்புகார் தாக்கல் செய்யவில்லை. பிவாசாஆ6 பதில் அறிவிப்பில் பிவாசாஆ3 கிரைய ஒப்பந்தப்படி ஏற்றுதல் ஆற்றுகை பரிகாரம் கோரி உரிய சிவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிவாசாஆ3 கிரைய ஒப்பந்தப்படி அ.வ.எண்.85/2008 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னுடைய நிரூபனவாக்குமூலத்தில் பாரா 3ல் 04.11.2007ம் தேதி 1ம் பிரதிவாதி என்னிடம் ரூ.4 லட்சத்தை பெற்றுக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் 04.11.2007ல் 1ம் பிரதிவாதியிடம் நான் ரூ.4 லட்சத்தை கொடுத்ததற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிரூபனவாக்குமூலத்தில் பக்கம் 7, 8ல் 19.12.2007ல் ரூ.2 லட்சமும் 11.01.2008ல் ரூ.2 லட்சமும் நான் கொடுத்ததாக சொல்லி வருவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ7 பாகப்பிரிவினை பத்திரத்தை எப்போது எடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. யார் மூலமாக எடுத்தேன் என்பதும் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி நகலை எடுத்து பார்த்த பிறகு தான் வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் சொத்து விபரம் பற்றி எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான்.

அதே போல் பிவாசாஆ8 மற்றும் பிவாசாஆ9 ஆகிய இரண்டு அடமானப்பத்திரங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி இரண்டு அடமானப்பத்திரங்களின் நகல்களை நான் தான் எடுத்தேன். மேற்படி நகல்களை எடுத்த பிறகு தான் மேற்படி அடமானங்கள் பற்றி எனக்கு தெரியவந்தது. பிவாசாஆ4 அறிவிப்பில் பிவாசாஆ8 மற்றும் பிவாசாஆ9 அடமானங்கள் பற்றிய விபரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் 3ம் பிரதிவாதி வட்டிக்கு ஈடாக மேற்படி சொத்தை அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிவாசாஆ4 அறிவிப்பினை 23.04.2008ல் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலமாக அறவிப்பு ஒன்றை எனக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படுவது தான் அந்த அறிவிப்பு அலுவலக நகல் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி அறிவிப்பினை நான் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை தான் என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரிதான். அந்த ஒப்புகை அட்டை **பிவாசாஆ10**. மேற்படி பிவாசாஆ10 ஒப்புகை அட்டையின்படி நான் பெற்றுக்கொண்ட அறிவிப்பிற்கு பதில் அனுப்பி வைக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது.

**வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**